# தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்
## முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2022

## வகுப்பு 9

நேரம்: 1.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 50

**அ) உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **8×1=8**

1) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் நூலை எழுதியவர்
அ) மாக்ஸ்முல்லர் ஆ) கால்டுவெல் இ) எமினோ ஈ) பிரான்சிஸ் எல்லிஸ்

2) தமிழ்விடுதூது ............. என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

3) காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! - எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! ......... இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்.
அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி

4) அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தா மணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு
அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

5) ''மிசை'' - என்பதன் எதிர்ச்சொல் என்ன?
அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

6) நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

**பாடலைப் படித்து விடை தருக:**

வான் உட்கும் வடிநீண் மதில்
மல்லல் மூதூர் வய வேந்தே!
செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்

7) இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) குடபுலவியனார் ஆ) ஈரோடு தமிழன்பன்
இ) சேக்கிழார் ஈ) தமிழ் ஒளி

8) மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

**ஆ) எவையேனும் ஆறனுக்கு விடை தருக:** **6×2=12**

9) நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?
10) தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.
11) கண்ணி என்பதன் விளக்கம் யாது?
12) வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.
13) **தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க:**
அ) சித்திரமும் கைப்பழக்கம் ..................
ஆ) கற்றோர்க்குச் சென்ற ..................

14) கலைச்சொல் தருக:

1. Linguistics - ..................
2. Water Management - ..................

15) உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

16) நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?

**இ) எவையேனும் நான்கனுக்கு விடை தருக: (17 - கட்டாய வினா)** **4×3=12**

17) **அடிமாறாமல் எழுதுக:**

'தித்திக்கும் தெள்ளமுதாய்' எனத் தொடங்கும் பாடல்

**(அல்லது)**

'நீர் இன்று அமையா' எனத் தொடங்கும் பாடல்

18) மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?

19) காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?

20) அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.

21) சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

22) பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

**ஈ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:** **2×5=10**

23) தூது அனுப்பத் தமிழே சிறந்தது - தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

**(அல்லது)**

உங்களின் நண்பர் பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் ''கால்முளைத்த கதைகள்'' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

24) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:**



**உ) விரிவான விடையளிக்க:** **1×8=8**

25) திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

**(அல்லது)**

'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

----------